2005 மார்ச் 30]

பரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு செயல்படுத்துவது பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மூலம் ஆண்டிப்பட்டியில் தொடங்கப்பட்டுள்ள புதிய கலைக் கல்லூரியில் அதிகப்படியான மாணவ, மாணவியர் பயின்று வருவதால், கட்டட வசதி போதிய அளவில் இல்லாமல் இருக்கிறது. அதை வருகின்ற காலங்களில் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் ஆண்டிப்பட்டி தொகுதியிலே புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதியதாகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

256—

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

***53361—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலாரிக்குழி ஊராட்சி மற்றும் படநிலை ஊராட்சி, காடுவெட்டியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2005 மார்ச் 30

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலாரிக்குழி ஊராட்சி மற்றும் படநிலை ஊராட்சி, காடுவெட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து சங்கம் அமைக்கக் கோரிக்கை பெறப்பட்டால், சங்கம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. அண்ணாதுரை.

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இலவச மின்சாரத்தை எங்களது பகுதியிலே அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது தொகுதிக்குட்பட்ட மேலாரிக்குழி, படநிலை, மீன்சுருட்டி ஆகிய பகுதிகளில் முந்திரிக் காடுகள், சவுக்குக் காடுகள் போன்ற காடுகள் இருப்பதால் அங்கே மாடுகளுக்குத் தேவையான தீவனங்கள் அதிகப்படியாகக் கிடைக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் தங்கள் முக்கியத் தொழிலாக பால் உற்பத்தி செய்கின்ற தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலை அதிகமாக தனியார் அங்கே குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று விடுகின்ற காரணத்தால் அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகின்ற வகையிலே அந்தப் பாலை கூட்டுறவுச் சங்கங்களே அதிக விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய சிறப்பு அனுமதி வழங்கப்படுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சங்கம் புதியதாக அமைக்கப்படுகிறபொழுது அது இலாபகரமாகச் செயல்படக்கூடிய வாய்ப்புகளையும் அந்தக் கிராமத்திலே பால் உற்பத்தி செய்பவர்களுடைய குறைந்தபட்சம் 25 பால் உற்பத்தியாளர்களுடைய ஒருங்கிணைந்த கோரிக்கையும் பெறப்பட்டால், எந்தப் பகுதியாக இருந்தாலும் சங்கம் அமைத்துக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 30]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளவழகன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் வி.கைகாட்டி என்ற இடத்தில் பால் குளிரூட்டும் நிலையத்திற்கான கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாங்குடி கைகாட்டி என்ற பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதற்குண்டான நிலம் 6.3 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த மாவட்டத்தினுடைய D.R.D.A.-விலிருந்து நிதியாக ரூபாய் 10 இலட்சத்தை அளித்திருக்கின்றார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, குறிப்பிட்ட தொகையை அளிப்பதற்கு கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். இவற்றை வைத்து ஆரம்பக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அங்கே மும்முனை மின்சாரம் பெறுவதற்கு மனு அளிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கொண்டு நபார்டு வங்கியின் மூலமாக 2 கோடி ரூபாய் கடனாகப் பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 257, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

257—

மீன்வள மேம்பாடு

***53422—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுமா?